(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 7 (6).]

# பாராளுமன்றம்

## 7 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2017 ஒக்தோபர் 20 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2017 நவம்பர் 07, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர்,— வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 126 மற்றும் 321 ஆம் பிரிவுகளின் கீழ், கடலோடிகளுக்கான பயிற்சியளித்தல், சான்றளித்தல், காவல் காத்தலில் ஈடுபடல் நியமங்கள் தொடர்பாக துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 மே 08 ஆம் திகதிய 2018/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் திருத்தப்பட்ட 2016 ஒக்டோபர் 04 ஆம் திகதிய1987/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.10.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## 2017 நவம்பர் 16, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1687/ '17

கௌரவ டக்ளஸ் தேவானந்த,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கிழக்கு மாகாணத்தின் 331 பாடசாலைகளில் அதிபர்கள் இல்லையென்பதையும்; பதிற்கடமையாற்றும் அதிபர்களாக 252 பேர் செயலாற்றுகின்றனரென்பதையும்;

(ii) இந்த பதிற்கடமையாற்றும் அதிபர்களை இலங்கை அதிபர் தரத்திற்கு உள்ளீர்க்குமாறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளனவென்பதையும்;

(iii) பட்டிருப்பு கல்வி வலயத்தின் போரதீவுப்பற்று கோட்டத்தில் 1ஏ, பீ தரத்தைச் சேர்ந்த பாடசாலைகள் இல்லையென்பதையும்;

(iv) அக்கோட்டத்தில் கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்களை கற்பிப்பதற்கான ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிட்டுள்ள 331 பாடசாலைகளுக்காக அதிபர்களை நியமிக்க மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(ii) பதிற்கடமையாற்றும் 252 அதிபர்களின் நிலைமை என்ன;

(iii) போரதீவுப்பற்று கோட்டத்திற்கு 1ஏ, பீ தரத்தைச்சேர்ந்த பாடசாலையொன்றை வழங்க இயலுமா;

(iv) கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறைய நிவர்த்திசெய்ய மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்பைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2121/ '17

கௌரவ ஜயந்த சமரவீர,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015.01.09 திகதி உள்ளவாறு மற்றும் 2017.06.30 திகதி உள்ளவாறு,

(i) யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நிறுவப்பட்டிருந்த இலங்கை தரைப்படை முகாம்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி முகாம்களுக்கு இணைக்கப்பட்டு சேவையாற்றிய மொத்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மற்றும் படை வீரர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) ஒவ்வொரு முகாமினதும் பெயர், அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் இணைக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்கள் மற்றும் படை வீரர்களின் எண்ணிக்கை தனித்தனியே யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) 2015.01.09 ஆம் திகதி தொடக்கம் 2017.06.30 ஆம் திகதி வரையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில்,

(i) அகற்றப்பட்டுள்ள தரைப்படை முகாம்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) தரைப்படை முகாம்களிலிருந்து அகற்றப்பட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் படை வீரர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து தரைப்படை முகாம்களையும் மற்றும் இவற்றில் பணியாற்றிய உத்தியோகத்தர்கள் மற்றும் படைவீரர்களையும் அகற்றுவதானது தேசிய பாதுகாப்பில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தலாமென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2125/ '17

கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் மன்னார் மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் கற்கை நிலையமானது (Study Center) இற்றைவரை காலமும் தற்காலிக கட்டிடமொன்றில் இயங்கி வருகின்றதென்பதையும்;

(ii) நிரந்தர கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக காணி ஒதுக்கப்பட்டுள்ள போதிலும், இற்றைவரை நிர்மாணிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை என்பதையும்;

(iii) 2017.06.20 ஆம் திகதி நிர்மாணிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக நிதி ஏற்பாடுகளை ஒதுக்குமாறு என்னால் எழுத்து மூலமான கோரிக்கை மேற்கொள்ளப்பட்டதென்பதையும்;

(iv) வட மாகாணத்தின் வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய நான்கு மாவட்டங்களில் திறந்த பல்கலைக்கழகத்தின் பிரதேச நிலையங்களுக்காக / கற்கை நிலையங்களுக்காக நிரந்தரக் கட்டிடங்கள் உள்ளபோதிலும் மன்னார் மாவட்டத்திற்கு மட்டும் நிரந்தரக் கட்டிடமொன்று இல்லையென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) எதிர்வரும் காலத்தில் மேற்கொள்ளப்படும் நிதி ஒதுக்கீடுகளின்போது தற்போது மன்னார் மாவட்டத்தில் தற்காலிக கட்டிடமொன்றில் இயங்கி வருகின்ற திறந்த பல்கலைக்கழகத்தின் கற்கை நிலையத்தின் பொருட்டு நிரந்தரக் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக தங்கள் அமைச்சின் மூலம் நிதி ஏற்பாடுகளை ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2188/ '17

கௌரவ பிரசன்ன ரணதுங்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2017 ஆம் ஆண்டு மினுவங்கொட கல்விக் கோட்டத்திலுள்ள பாடசாலைகளில் புதிய கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், புதிய கட்டிடங்களை நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டுள்ள பாடசாலைகள் மற்றும் அதற்கான பணத் தொகை வெவ்வேறாக யாது;

(iii) மினுவங்கொட கல்விக் கோட்டத்திலுள்ள பாடசாலைகளில் பாதி வேலைகள் முடிவடைந்த கட்டிடங்கள் உள்ளனவா;

(iv) ஆமெனில், அப்பாடசாலைகள் மற்றும் குறித்த கட்டிடங்கள் தொடர்பான விபரங்களை முன்வைப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மினு/மெத் விஜய மாதிரிப் பாடசாலை எனும் பெயரில் ஒரு புதிய பாடசாலையை மினுவங்கொட கல்விக் கோட்டத்தில் புதிதாக நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவு;

(iii) 6 தொடக்கம் 13 ஆம் தரம் வரையான வகுப்புக்கள் நடைபெறும் பாடசாலையொன்றை நிர்மாணிக்க இந்நிதி ஏற்பாடு போதுமானதா;

(iv) இப்பாடசாலையின் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படும் காலம் எவ்வளவு;

(v) இதற்கான நிதி ஏற்பாடுகளை ஒதுக்கீடு செய்ய எதிர்பார்க்கப்படும் முறை யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2194/ '17

கௌரவ விமலவீர திசாநாயக்க,— நிதி மற்றும் வெகுசனஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2006 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகாரசபைச் சட்டத்தின்படி மதுபானம் மற்றும் புகை பிடித்தல் காட்சிகளைக்கொண்ட தொலைக்காட்சி நாடகங்கள், திரைப்படங்கள் அல்லது விளம்பரப் பிரசாரங்கள் தடைசெய்யப்பட்டுள்ளன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், வெகுவசன ஊடக அமைச்சினால் நிருவகிக்கப்படும் சுயாதீன தொலைக்காட்சி அலைவரிசையில் 2017.02.11 ஆம் திகதி பி.ப. 7.30 க்கும் 8.00 மணிக்கும் இடையில் ஒளிபரப்பப்பட்ட "சுவேத்த கங்தீர" தொலைக்காட்சி நாடகத்தின் ஒரு காட்சியில் ஒரு நடிகை புகை பிடிப்பது தெளிவாகக் காட்சிப்படுத்தப்பட்டது என்பதையும்;

(ii) குறிப்பாக, ஒரு பெண் புகைப்பிடிக்கின்ற காட்சி ஒளிபரப்பப்படுவதன் காரணமாக இது புகைபிடித்தலுக்கு ஊக்குவிப்பாக அமையலாம் என்பதையும்;

(iii) பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட சட்ட ஏற்பாடுகள் அரச வெகுசன ஊடக நிறுவனமொன்றினால் மீறப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இந்த ஒளிபரப்பு தொடர்பாக முறைசார்ந்த விசாரணையொன்றை நடாத்தி இனிமேல் இவ்வாறான சம்பவங்களைத் தவிர்க்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2216/ '17

கௌரவ எஸ். சிறீதரன்,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2006 ஆம் ஆண்டு வரை வடக்கு கிழக்கு பிரதேசங்களில் தமிழர் புனர்வாழ்வுக் அமைப்பு என்ற பெயரில் தொண்டர் அமைப்பொன்று இயங்கி வந்தது என்பதையும்;

(ii) 2006 ஆம் ஆண்டின் பின்னர் அதன் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டுள்ளன என்பதையும்;

(iii) மேற்படி அமைப்பு இலங்கையில் தடை செய்யப்பட்டபோது பல கோடி ரூபா பணம் இலங்கையில் அமைந்துள்ள வங்கிகளினால் முடக்கப்பட்டது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) தமிழர் புனர்வாழ்வுக் அமைப்பு இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட தொண்டர் அமைப்பொன்றாக இயங்கி வந்த காலப்பகுதி யாதென்பதையும்;

(ii) மேற்படி அமைப்பு இலங்கையில் கணக்குகளைப் பேணிவந்த வங்கிகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு வங்கியிலும் வைப்புச் செய்யப்பட்டிருந்த பணத் தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி தொண்டர் அமைப்பு இலங்கையில் தடை செய்யப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) தடை செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் அவ்வமைப்பு கொண்டிருந்த அசையும், அசையா மற்றும் திரவத் தன்மையுடைய சொத்துக்களின் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(iii) அச்சொத்துக்களுக்கு என்ன நடந்தது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2233/ '17

கௌரவ டீ.வீ. சானக,— துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை துறைமுகத்தை தனியார் மயபடுத்துவதற்காக இரண்டு கம்பனிகளிலிருந்து முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததா என்பதையும்;

(ii) ஆமெனில், அக்கம்பனிகளில் ஒரு கம்பனி தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படை யாதென்பதையும்;

(iii) அக்கம்பனியை தேர்ந்தெடுக்க தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவும் அமைச்சரவை பெறுகைக் குழுவும் வழங்கியுள்ள விதப்புரைகள் யாவையென்பதையும்;

(iv) தேர்ந்தெடுக்கப்பட்ட கம்பனியுடன் கைசாத்திடப்படும் இரண்டு உடன்படிக்கைகளும் யாவையென்பதையும்;

(v) மேற்படி உடன்படிக்கைகள் மூலமாக தாபிக்கப்படும் இரண்டு கம்பனிகளினதும் பங்குகள் எவ்வாறு பகிர்ந்தளிக்கப்படும் என்பதையும்;

(vi) மேற்படி இரண்டு கம்பனிகளுக்கும் ஒப்படைக்கப்படும் பணிகள் தனித்தனியாக யாவையென்பதையும்;

(vii) அக்கம்பனிகளுக்கு கிடைக்கும் வருமான வழிகள் யாவையென்பதையும்;

(viii) தற்போது கடமைபுரிகின்ற ஊழியர்களின் தொழில் பாதுகாப்பு தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

(ix) துறைமுகத்தின் பராமரிப்பு பணிகள் ஒப்படைக்கப்படும் கம்பனி யாதென்பதையும்;

(x) மேற்படி தனியார்மயமாக்கல் மூலமாக அரசாங்கத்திற்கும் இலங்கை துறைமுக அதிகார சபைக்கும் கிடைக்கின்ற வருமான மூலங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2017 திசெம்பர் 06, புதன்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

690/ '16

கௌரவ புத்திக பத்திரண,— கிராமியப் பொருளாதார விவகாரங்கள் பற்றிய அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிரம்பு சார்ந்த உற்பத்திக் கைத்தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளவர்கள் தற்போது அக்கைத்தொழிலிலிருந்து விலகிச் செல்கின்றனர் என்பதையும்,

(ii) மூலப்பொருள் மற்றும் சந்தை தொடர்பாக பிரச்சினைகள் காணப்படுகின்றன என்பதையும்,

(iii) இது இந் நாட்டுக்கு பெருமளவு வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டித்தரக் கூடிய ஒரு கைத்தொழிலாகுமென்பதையும்,

அவர் அறிவாரா?

(ஆ) (i) பிரம்பு சார்ந்த உற்பத்திகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றனவா என்பதையும்,

(ii) ஆமெனில், 2015 ஆம் ஆண்டினுள் பெற்றுக்கொள்ளப்பட்ட ஏற்றுமதி வருமானம் யாதென்பதையும்

(iii) ஏற்றுமதி செய்யப்படுவதில்லையெனில், ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(iv) ஆமெனில், அது எத்திகதியிலிருந்து என்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) நாட்டினுள் பிரம்புக் கைத்தொழிலுக்கு தேவையான சந்தையை விரிவுபடுத்த அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், மேற்படி நடவடிக்கைகள் யாவையென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1738/ '17

கௌரவ சமிந்த விஜேசிறி,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கு ஏற்புடையதாக, ஊவா மாகாண கல்வித் திணைக்களம் தொடர்பாக 2016.10.18 ஆம் திகதிய கணக்காய்வு வினாவொன்று வெளியிடப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா;

(ii) ஆமெனில், அக்கணக்காய்வு வினாவில் பாடசாலை அடிப்படையிலான முகாமைத்துவம் மற்றும் பாடசாலை அடிப்படையிலான ஆசிரியர் அபிவிருத்தி தொடர்பாக தாய்லாந்திலும் பிலிப்பைனிலும் நடைபெற்ற ஆசிரியர் பயிற்சி செயலமர்வுகளுக்கு ஏற்புடையதாக, இலக்கம் 2, ஆ, இ, ஈ, உ, ஊ ஆகிய பிரிவுகளிலுள்ள விடயங்கள் மற்றும் 03 ஆம் இலக்க பந்தியிலுள்ள விடயங்களை இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா;

(iii) அதன்போது நடைபெற்றுள்ள ஏதேனும் முறைகேடுகள், ஊழல்கள் மற்றும் சட்ட விரோத செயல்களுடன் தொடர்புடைய உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்வாரா;

(iv) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2169/ '17

கௌரவ விஜித்த ஹேரத்,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உமாஓய கருத்திட்டத்துக்கென சுவீகரிக்கப்பட்ட வீடுகள், மேட்டு நிலக் காணிகள் மற்றும் வயல் காணிகளுக்காக இழப்பீடு செலுத்துவதற்கு உள்ள ஆட்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கமைய எவ்வளவென்பதையும்;

(ii) சொத்துக்கள் சுவீகரிக்கப்பட்டுள்ள போதிலும், 2014 ஒக்றோபர் மாதத்திலிருந்து இன்றுவரை இழப்பீடு செலுத்தப்படாத ஆட்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கமைய எவ்வளவென்பதையும்;

(iii) இற்றைவரை இழப்பீடு செலுத்தப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) இழப்பீட்டுத் தொகை நீதிமன்றத்தில் வைப்பிலிடப்படும் அடிப்படை யாதென்பதையும்;

(v) இழப்பீட்டுத் தொகையை நீதிமன்றத்தில் வைப்பிலிடுவதற்கு சட்ட மாஅதிபர் திணைக்களத்தின் ஆலோசனைகள் பெறப்படுமா என்பதையும்;

(vi) ஆமெனில், அதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்;

(vii) சட்ட மாஅதிபர் திணைக்களத்திற்கு ஆற்றுப்படுத்துவதற்கான அடிப்படை யாதென்பதையும்;

(viii) இற்றைவரை இழப்பீடு கிடைக்காமல் அநீதிக்குள்ளாகியுள்ள ஆட்களுக்கு இழப்பீடு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2187/ '17

கௌரவ பிரசன்ன ரணதுங்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) ஆசிரியர்களுக்கு புதிய அறிவினை ஊட்டுவதற்கு ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் ஏதுவாக அமையுமென்பதை ஏற்கொள்வாரா என்பதையும்;

(ii) 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் கல்வி அமைச்சினால் வலய மற்றும் விடய மட்டத்தில் ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) அவ்வாறு ஒழுங்குசெய்யப்பட்ட ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை, பாடங்கள் மற்றும் அதற்காக செலவுசெய்யப்பட்ட பணத்தொகை ஆகியன ஒவ்வொரு வருடத்திற்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2016.06.06 இலுள்ளவாறு மேல் மாகாண மினுவாங்கொடை கல்வி வலயத்தின் ஆசிரியர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பாடசாலைக்கமைய எவ்வளவென்பதையும்;

(ii) 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் அவர்களுக்கு பயிற்சியளிப்பதற்காக நடத்தப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை மற்றும் அதற்காக செலவுசெய்யப்பட்ட பணத்தொகை ஆகியன ஒவ்வொரு வருடத்திற்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும் ;

(iii) இதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகை மற்றும் நடைமுறைப்படுத்திய ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர்களது பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து நிதி ஒதுக்க முடியாது என்பதை அறிவாரா என்பதையும்;

(v) தேசிய தேவையெனக் கருதி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பன்முகப் படுத்தப்பட்ட நிதியிலிருந்து ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு நிதி ஒதுக்குவதற்கு இயலுமான வகையில் கொள்கை ரீதியிலான தீர்மானம் எடுப்பாரா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2192/ ’17

கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன,— அரச தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வ/ப மிஹின் லங்கா விமானக் கம்பனியினால் நடாத்தப்பட்டுவந்த விமானப் பயண நிகழ்ச்சித்திட்டங்களை, 2016.10.30 ஆம் திகதி தொடக்கம் ஸ்ரீ லங்கன் விமானக் கம்பனி பொறுப்பேற்றுக் கொண்டது என்பதை அறிவாரா;

(ii) அதற்கு சமாந்தரமாக ஸ்ரீ லங்கன் விமானக் கம்பனிக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட மிஹின் லங்கா ஊழியர்களின் எண்ணிக்கை யாது, இவர்களின் பெயர் மற்றும் பதவிகள் யாவை;

(iii) இவ்வாறு சேர்த்துக்கொள்ளப்படாது சேவை முடிவுறுத்தப்பட்ட மிஹின் லங்கா ஊழியர்களின் எண்ணிக்கை யாது, இவர்களின் பெயர் மற்றும் பதவிகள் யாவை;

(iv) சேவை முடிவுறுத்தப்பட்ட ஒவ்வொரு ஊழியருக்கும் செலுத்தப்பட்ட நட்ட ஈட்டுத் தொகை வெவ்வேறாக யாது;

(v) 2016.12.31ஆம் திகதியின் பின்னர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளவர்களின் பெயர் மற்றும் பதவிகள் யாவை;

(vi) 2016.12.31 ஆம் திகதி வரை ஆலோசகர் பதவிகளை வகித்துக் கொண்டிருந்தவர்களின் எண்ணிக்கை யாது;

(vii) மேலே (vi) இல் குறிப்பிடப்பட்டவர்களில் எதிர்வரும் மாதங்களுக்காக சம்பளம் வழங்கப்பட்டுள்ளோரின் எண்ணிக்கை யாது, இவர்களுக்குச் செலுத்தப்பட்ட நட்டஈட்டுத்தொகை, சம்பளம் அல்லது கொடுப்பனவு எவ்வளவு;

(viii) போதியளவு நட்டஈடு கிடைக்காமையால் மேன்முறையீடு செய்துள்ளவர்களின் எண்ணிக்கை யாது;

(ix) இவர்களுக்கு நிலுவை நட்டஈட்டுத் தொகை வழங்கப்படுமா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2196/ ’17

கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே,— அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கத்திற்குச் சொந்தமான மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கும் அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்திற்கும் சொந்தமான தோட்டங்களில் சேவையாற்றுகின்ற தொழிலாளர்களின் சம்பளத்திலிருந்து கழிக்கப்படுகின்ற ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் மற்றும் பணிக்கொடை கொடுப்பனவு ஆகியன 2016 ஆம் ஆண்டு இறுதியளவிலும், பல வருடங்களாகவும் மேற்படி ஊழியர்களுக்கு செலுத்தப்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) மேற்படி தோட்டங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை மற்றும் இற்றைவரை இவர்களுக்கு செலுத்த வேண்டிய நிலுவைப் பணத் தொகைகள் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) நிதியங்கள் கிடைக்க வேண்டிய சில தொழிலாளர்கள் ஏற்கனவே இறந்துள்ளனர் என்பதோடு இப்பணத் தொகைகள் இவர்களுக்கு செலுத்தப்படாமையின் மூலம் இவர்களது குடும்ப அங்கத்தவர்களுக்கு பாரிய அநீதி நேர்ந்துள்ளதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) இப்பணத் தொகைகளை உடனடியாக தொழிலாளர்களுக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(v) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2283/ ’17

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொதுப் பணியொன்றிற்காக காணிகளை சுவீகரித்தலின் கீழ், 2017 பெப்ரவரி 13 ஆம் திகதிய 2006/11 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக கொட்டபொல பிரதேச செயலாளரினால் மேற்கொள்ளப்பட்ட காணியை சுவீகரிக்கும் பணிகள் நிறைவுபெற்றுள்ளதா என்பதையும்;

(ii) இன்றேல், சம்பந்தப்பட்ட சுவீகரிப்பு பணிகளின் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2433/ '17

கௌரவ டி.வி. சானக,— துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை துறைமுகத்தை தனியார்மயப்படுத்தும் உடன்படிக்கையின் மூலம் வழங்கப்படுகின்ற காணிகளின் அளவு மற்றும் அவை வழங்கப்படுகின்ற அடிப்படை யாது என்பதையும்;

(ii) மேற்படி உடன்படிக்கையின் மூலம் தொழிற்பாட்டு முனையத்திற்காக வழங்கப்படுகின்ற காணிகளுக்கு குத்தகை வாடகை அறவிடப்படுமா என்பதையும்;

(iii) மேற்படி துறைமுகத்தின் மூன்றாம் மற்றும் நான்காம் கட்டங்களின் நிர்மாணிப்பு உரிமை உடன்படிக்கை செய்துகொண்டுள்ள இரண்டு கம்பனிகளில் ஒன்றுக்கு வழங்கப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், வழங்கப்படுகின்ற அடிப்படை யாது என்பதையும்;

(v) அம்பாந்தோட்டை துறைமுகத்தின் இரண்டாம் கட்டத்தின் போது நிர்மாணிக்கப்பட்ட 110 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட தீவு இவ்விரண்டு கம்பனிகளில் ஒன்றுக்கு வழங்கப்படுமா என்பதையும்;

(vi) ஆமெனில், வழங்கப்படுகின்ற அடிப்படை யாது என்பதையும்;

(vii) இதற்காக உள்நாட்டு அல்லது சர்வதேச கம்பனியொன்றிலிருந்து விலைமதிப்பு பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(viii) இன்றேல், அப்பெறுமதி தீர்மானிக்கப்பட்ட அடிப்படை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2017 திசெம்பர் 07, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

691/ '16

கௌரவ புத்திக பத்திறண,— கிராமியப் பொருளாதார விவகாரங்கள் பற்றிய அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பன் சார்ந்த உற்பத்திக் கைத்தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளவர்கள் தற்போது அக்கைத்தொழிலிலிருந்து விலகிச் செல்கின்றனர் என்பதையும்;

(ii) மூலப்பொருள் மற்றும் சந்தை தொடர்பாக பிரச்சினைகள் காணப்படுகின்றன என்பதையும்;

(iii) இது இந் நாட்டுக்கு பெருமளவு வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டித்தரக் கூடிய ஒரு கைத்தொழிலாகுமென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) பன் சார்ந்த உற்பத்திகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனில், 2015 ஆம் ஆண்டினுள் பெற்றுக்கொள்ளப்பட்ட ஏற்றுமதி வருமானம் யாதென்பதையும்;

(iii) ஏற்றுமதி செய்யப்படுவதில்லையெனில், ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அது எத்திகதியிலிருந்து என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) நாட்டினுள் பன் சார்ந்த கைத்தொழிலுக்கு தேவையான சந்தையை விரிவுபடுத்த அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1233/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள தொல்பொருளியல் ரீதியில் பெறுமதிமிக்க இடங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி இடங்களில் தற்போது பேணல் பணிகள் மேற்கொள்ளப்படுகின்ற இடங்கள் யாவை;

(iii) இதற்காக 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(iv) எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாதிகளால் அழிக்கப்பட்ட தொல்பொருளியல் ரீதியில் பெறுமதிமிக்க இடங்கள் யாவை;

(v) மேற்படி அழிவுகள் பற்றிய மதிப்பீடொன்று செய்யப்பட்டிருப்பின், மதிப்பீட்டுப் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு;

(vi) மேற்படி அழிவுகள் தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(vii) மேற்படி அனைத்தினதும் முழுமையானதோர் அறிக்கையை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1378/ '16

கௌரவ பந்துல குணவர்த்தன,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட பிரேரணை இலக்கம் 132 இற்கு அமைய, பொலன்னறுவை, கிளிநொச்சி, இரத்தினபுரி (எம்பிலிபிட்டி) மாவட்டங்களில் மூன்று பாரிய களஞ்சியங்களை நிர்மாணிக்க மற்றும் மன்னார் மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டுவரும் களஞ்சியத்தின் வேலைகளை பூர்த்தி செய்ய ரூபா 1000 மில்லியன் ஒதுக்கப்பட்டதை அவர் ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(ii) மன்னார் மாவட்டத்தில் நிர்மாணிக்கப்படுகின்ற களஞ்சியத்தின் ஆரம்ப செலவின மதிப்பீட்டையும் மற்றும் இதுவரையான அதன் முன்னேற்ற மீளாய்வு அறிக்கையையும் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) கிளிநொச்சி, எம்பிலிபிட்டிய மற்றும் பொலன்னறுவையில் புதிய மூன்று களஞ்சியத் தொகுதிகளை நிர்மாணிக்கின்ற நடவடிக்கைகளின் முன்னேற்றம் யாது என்பதையும்;

(iv) 2015 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட பிரேரணை இலக்கம் 132 இற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 1000 மில்லியன் தொகை செலவிடப்பட்ட முறை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1517/ '17

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசியலமைப்பு சீர்திருத்தம் பற்றி பொதுமக்களின் கருத்துக்களை விசாரித்தறியும் குழுவுக்காக அரசாங்கத்தினால் ஏற்கப்பட்ட மொத்த செலவு எவ்வளவு;

(ii) மேற்படி குழு அங்கத்தவர்களின் பெயர்கள் யாவை;

(iii) மேற்படி குழுவுக்கான அங்கத்தவர்களை நியமிக்கையில் கருத்திற்கொண்ட மூலப்பிரமாணங்கள் யாவை;

(iv) பௌத்த மதம் தொடர்பில் அரசியலமைப்பில் உள்ள இரண்டாவது அத்தியாயத்தை அவ்வண்ணமே பேணிவருமாறு விதப்புரை செய்துள்ள குழு அங்கத்தவர்களின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1898/ '17

கௌரவ சமிந்த விஜேசிறி,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஊவா மாகாணசபையில் இடம்பெற்றுள்ள மற்றும் இடம்பெற்று வருகின்ற முறைகேடுகள் சம்பந்தமாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் SIN/B/AG/KI/2017/02 இலக்கமும் 2017.04.20 திகதியும் கொண்ட புலனாய்வு அறிக்கை ஒன்று ஊவா மாகாண பிரதம செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதென்பதை அவர்அறிவாரா;

(ஆ) (i) அவ்வறிக்கையில் ஊவா மாகாணசபையின் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பதவிநிலை தரத்திலான உத்தியோகத்தர்களுக்கான வெளிநாட்டுக் கற்கை விஜயங்கள் சம்பந்தமாக வெளிக்கொணரப்பட்டுள்ள, பந்தி இலக்கம் 3 (அ) (i) தொடக்கம் (x) வரையான விடயங்களை இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா;

(ii) மேற்படி வெளிக்கொணரல்கள் தொடர்பான அறிக்கையில் (ஆ)(i) தொடக்கம் (iii) வரை மேற்கொண்டுள்ள அவதானிப்புகளைச் சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2189/ '17

கௌரவ ரீ. ரஞ்ஜித் த சொய்ஸா,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த அமைச்சரவை மாற்றத்தின் படி தற்போதைய அரசாங்கத்தின் மொத்த அமைச்சரவை அமைச்சர்களின் எண்ணிக்கை யாது;

(ii) இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iii) அமைச்சுக்களின் மேற்பார்வை அலுவல்கள் ஒப்படைக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை யாது;

(iv) அமைச்சரவை அமைச்சரொருவருக்காக வருடாந்தம் செலவாகும் மொத்தப் பணத் தொகை எவ்வளவு;

(v) அமைச்சரவை மாற்றத்தின்போது புதிதாக அதிகரிக்கப்பட்ட அமைச்சுக்களுக்கு 2017 வரவு செலவுத்திட்டத்தின் மூலம் நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா;

(vi) ஆமெனில், ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2198/ '17

கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி, நுவரெலியா மற்றும் பதுளை மாவட்டங்களின் பெருந்தோட்டங்களில் பஸ்வண்டிகள் செல்கின்ற கிராமிய பாதைகளை காபட் இடுவதற்கு அல்லது தார் இட்டு அபிவிருத்தி செய்வதற்கான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் அதற்காக ஒதுக்கப்பட்டிருந்த பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iii) அதன் மூலம் நிர்மாணிக்கப்படும் வீதிகள் பற்றிய பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) எதிர்வரும் காலத்தில் பெருந்தோட்டங்களிலுள்ள வீதிகளை அபிவிருத்தி செய்வதற்காக எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2217/ '17

கௌரவ எஸ். சிறீதரன்,— சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள் குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்குட்பட்ட முகமாலை கிராமம் தொடர்பாகவும்;

(ii) அக்கிராமத்தின் நிலப் பரப்பு மற்றும் சனத்தொகை தொடர்பாகவும்;

(iii) மேற்படி பிரதேசத்தில் நிலக்கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டுள்ளன என்பதையும் அவற்றை தற்போது அகற்றுகின்ற வேலைத்திட்டத்திற்காக நிதி உதவி வழங்குகின்றவர்கள் தொடர்பாகவும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) நிலக்கண்ணி வெடிகளை முழுமையாக அகற்றுவதற்கு எடுக்கப்படும் காலம் யாதென்பதையும்;

(ii) மேற்படி பிரதேசத்தை பொது மக்களுக்குக் குடியிருப்பதற்காக ஒப்படைப்பதற்கு எதிர்பார்க்கப்படும் திகதி யாதென்பதையும்;

(iii) மீளக் குடியமர்த்துதல், வீடமைப்புத் திட்டங்கள் போன்ற வசதிகளை அவர்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2017 திசெம்பர் 08, வெள்ளிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

692/ '16

கௌரவ புத்திக பத்திறண,— கிராமியப் பொருளாதார விவகாரங்கள் பற்றிய அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பித்தளை சார்ந்த உற்பத்திக் கைத்தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளவர்கள் தற்போது அக்கைத்தொழிலிலிருந்து விலகிச் செல்கின்றனர் என்பதையும்;

(ii) மூலப்பொருள் மற்றும் சந்தை தொடர்பாக பிரச்சினைகள் காணப்படுகின்றன என்பதையும்;

(iii) இது இந் நாட்டுக்கு பெருமளவு வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டித்தரக் கூடிய ஒரு கைத்தொழிலாகுமென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) பித்தளை சார்ந்த உற்பத்திகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனில், 2015 ஆம் ஆண்டினுள் பெற்றுக்கொள்ளப்பட்ட ஏற்றுமதி வருமானம் யாதென்பதையும்;

(iii) ஏற்றுமதி செய்யப்படுவதில்லையெனில், ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அது எத்திகதியிலிருந்து என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) நாட்டினுள் பித்தளை சார்ந்த கைத்தொழிலுக்கு தேவையான சந்தையை விரிவுபடுத்த அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1245/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1983 ஆம் ஆண்டளவில் அம்பாறை மாவட்டத்தில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டிருந்த வீடுகளின் எண்ணிக்கை யாது;

(ii) இன்றளவில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுகின்ற வீடுகளின் எண்ணிக்கை யாது;

(iii) 1983 ஆம் ஆண்டின் பின்னர் யுத்த நிலைமை முடிவடையும் வரை குடிநீர் வழங்குவதற்காக ஒவ்வோர் ஆண்டிற்கும் அரசாங்கம் ஒதுக்கிய மொத்தப் பணத்தொகை யாது;

(iv) யுத்த நிலைமை முடிவடைந்த பின்னர் 2015 ஆம் ஆண்டு வரை குடிநீர் வழங்கல் கருத்திட்டங்களுக்காக அரசாங்கம் ஒதுக்கிய மொத்த பணத்தொகை ஆண்டு வாரியாக தனித்தனியாக எவ்வளவு;

(v) மேற்படி அனைத்தினதும் முன்னேற்ற அறிக்கையைச் சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1750/ '17

கௌரவ லக்கி ஜயவர்தன,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இன்றளவில் இலங்கையில் பேணிவரப்படுகின்ற தொலைக்காட்சி அலைவரிசைகளின் எண்ணிக்கை யாது;

(ii) ஒவ்வொரு தொலைக்காட்சி அலைவரிசையையும் பேணிவருகின்ற நிறுவனம் தனித்தனியாக யாது;

(iii) ஒவ்வொரு தொலைக்காட்சி அலைவரிசையினதும் உரிமையாளர்கள் யார் மற்றும் மேற்படி அலைவரிசைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள திகதிகள் வெவ்வேறாக யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள தொலைக்காட்சி அலைவரிசைகளில் ஒளிபரப்பு மேற்கொள்ளப்பட்டுவராத தொலைக்காட்சி அலைவரிசைகள் உள்ளனவா;

(ii) ஆமெனில் அந்த அலைவரிசைகள் யாவை;

(iii) தொலைக்காட்சி அலைவரிசைகள் எவரால் ஒழுங்குமுறைப்படுத்தப்படுகின்றன;

(iv) மேற்படி ஒழுங்குமுறைப்படுத்தல் முறைப்படி அமுலாக்கப்படுவதில்லை என்பதை ஏற்றுக்கொள்கிறாரா;

(v) ஒருசில அலைவரிசைகள் ஊடாக தீயகருத்துடனும் அவமதிப்பு ஏற்படக்கூடிய வகையிலும் மேற்கொள்ளப்படுகின்ற பாரதூரமான சமூகப் பாதிப்பினைத் தடுப்பதற்காக தொலைக்காட்சி அலைவரிசைகளை ஒழுங்குமுறைப்படுத்து வதற்கான துரிதமான முறைசார்ந்த முறையிலொன்றை தயாரிப்பாரா;

(vi) ஆமெனில், அது எவ்வாறு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2069/ '17

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த சனவரி மாதத்தில் இருந்து யாழ்ப்பாணம் மாவட்டத்தின் தெல்லிப்பளை பிரதேச செயலாளர் பிரிவில் வலிகாமம் வடக்கு, ஊறணி பிரதேசத்தில் மக்கள் மீள்குடியேற்றப்பட்டனரென்பதையும்;

(ii) அதற்கிணங்க தற்போது அங்கு 20 குடும்பங்கள் வசிக்கின்றனவென்பதையும்;

(iii) இந்த மக்களுக்கு தமது வாழ்வாதாரத்தை ஈட்டிக்கொள்வதற்கான தொழில்முயற்சிகளில் ஈடுபட எவ்விதமான உபகரணங்களும் இல்லாமை காரணமாக கடும் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கின்றனரென்பதையும்;

(iv) இந்த மக்கள் மீள்குடியேற்றப்பட்டவேளையில் இவர்களுக்கு தொழில்களில் ஈடுபடுவதற்கான உபகரணங்களை வழங்குவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மக்களுக்கு தொழில்களுக்கான உபகரணங்களை வழங்குவதற்காக இன்றளவில் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(ii) மேற்படி உபகரணங்கள் வழங்கப்படும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2122/ '17

கௌரவ ஜயந்த சமரவீர,— பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பெற்றோல் இறக்குமதியின் போது ஒரு லீற்றர் பெற்றோலுக்காக அரசாங்கத்தினால் அறவிடப்படும் இறக்குமதி வரி எவ்வளவென்பதையும்;

(ii) பெற்றோல் லீற்றருக்கு அரசாங்கத்தினால் இறக்குமதி வரி தவிர வேறு வரிகள் அறவிடப்படுகின்றதா என்பதையும்;

(iii) ஆமெனின், அவ்வரிகள் யாவை என்பதையும்

(iv) ஒரு லீற்றருக்கு அறவிடப்படும் வரியின் அளவு, ஒவ்வொரு வரி வகைக்கு ஏற்ப எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) ஒரு லீற்றர் பெற்றோருக்காக அரசாங்கத்தினால் அறவிடப்படும் மொத்த வரியின் அளவு ஒரு லீற்றர் பெற்றோலின் சில்லறை விற்பனை விலையின் சதவீதமாக எவ்வளவென்பதையும்;

(ii) ஒரு லீற்றர் பெற்றோலுக்கு அரசாங்கத்தினால் அறவிடப்படும் அனைத்து வரிகளையுமா நீக்கினால், நுகர்வோருக்கு ஒரு லீற்றர் பெற்றோலை விற்பனை செய்யக்கூடிய சில்லறை விலை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) ஒரு லீற்றர் பெற்றோலுக்காக அரசாங்கத்தினால் வெவ்வேறு வகையான வரிகள் அறவிடப்படுகின்றமையானது பண்டங்கள் மற்றும் பணிகளின் விலை ஏற்றத்திற்கு ஏதுவாக அமைந்துள்ளதென்பதையும்;

(ii) ஒரு லீற்றர் பெற்றோலுக்காக அரசாங்கத்தினால் அறவிடப்படும் அனைத்து வரிகளையும் நீக்கினால், பண்டங்கள் மற்றும் சேவைகளின் விலையை குறைக்க முடியுமென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2141/ '17

கௌரவ அசோக்க பிரியந்த,— கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள நங்கூரத் தளங்களின் எண்ணிக்கை மற்றும் அவை அமைந்துள்ள இடங்கள் யாவையென்பதையும்;

(ii) புத்தளம் மாவட்டத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள பலநாள் மற்றும் ஒருநாள் படகுகளின் எண்ணிக்கை, ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கும் அமைய தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் வசிக்கின்ற மீனவர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2010 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை புத்தளம் மாவட்டத்தில்,

(i) கடற்றொழில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த செலவிடப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) நிவாரண அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள பலநாள் மற்றும் ஒருநாள் படகுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) நிவாரண அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள மீன்பிடிக் கருவித் தொகுதிகள், செய்திப் பரிமாற்றல் சாதனங்கள் மற்றும் உயிர் பாதுகாப்பு அங்கிகள் பற்றிய விபரங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2174/ '17

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசியலமைப்பின் பிரகாரம் இரட்டைப் பிரஜா உரிமையுடைய ஆளொரவராயிருத்தல் பாராளுமன்ற உறுப்பினராவதற்கு தகுதியீனமாகும் என்பதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(ii) எவரேனுமொரு ஆள் இரட்டை பிரஜா உரிமையைக் கொண்டுள்ள ஒருவரா என்பதை தீர்மானிப்பதற்கு அரசாங்கம் பயன்படுத்தும் முறையியல் யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2218/ '17

கௌரவ எஸ். சிறீதரன்,— சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள் குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிளிநொச்சி மாவட்டத்தின் கிளிநொச்சி நகர் கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள பரவிப் பாஞ்சான் பிரதேசம் தொடர்பாகவும்;

(ii) மேற்படி பிரதேசத்தில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் இற்றைவரை முழுமையாக பூர்த்தி செய்யப்படவில்லை என்பதையும்;

(iii) இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் காணப்பட்ட மேற்படி பிரதேசத்தில் நீண்ட காலங்களுக்குப் பின்னர் மக்கள் படிப்படியாக மீளக் குடியமர்த்தப்பட்டனர் என்பதையும்;

(iv) மேற்படி பிரதேசத்தில் வாழும் மக்களுக்குச் சொந்தமான காணிகளை உடனடியாக இராணுவத்திடமிருந்து விடுவித்து குறிப்பிட்ட மக்களுக்கு வழங்குவதாக சனாதிபதியினால் அறிவிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(v) 17.2 ஏக்கர் அளவிலான காணிப்பகுதி இன்னமும் விடுவிக்கப்படவில்லை என்பதையும்;

(vi) அதன் காரணமாக, அக்காணிகளுக்கான உரிமையைக் கொண்டுள்ள 56 குடும்பங்கள் தற்போது குடியிருப்பதற்கு இடமின்றி நிர்கதி நிலைமைக்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) சனாதிபதியின் அறிவித்தலின் பிரகாரம் மேற்படி காணிகள் முழுமையாக விடுவிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) 17.2 ஏக்கர் காணிகளை விடுவிக்கும் திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி (அ) (vi) இல் குறிப்பிடப்பட்டுள்ள 56 குடும்பங்களையும் மீளக் குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் திகதி யாதென்பதையும்;

(iv) அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2017 திசெம்பர் 09, சனிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

839/ '16

கௌரவ புத்திக பத்திரண,— போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சில நகர்சேர் தூரப் பயணச் சேவை கடுகதி புகையிரதங்களிலுள்ள உறங்கல் பெட்டிகள் சீரழிந்துள்ளனவென்பதையும்;

(ii) சில புகையிரதங்களில் சிற்றுண்டிசாலை வசதிகள் இல்லையென்பதையும்;

(iii) தற்போதுள்ள சிற்றுண்டிசாலைகளும் முறைசார்ந்தவையாக இல்லையென்பதையும்;

(iv) புகையிரத சிற்றுண்டிசாலைகளில் தரக்குறைவான உணவு பானங்கள் அதிக விலையில் விற்கப்படுகின்றன என்பதையும்;

(v) மேலே குறிப்பிடப்பட்ட விடயங்களின் காரணமாக புகையிரதப் பயணிகள் சிரமங்களுக்கு உள்ளாகின்றனரென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி புகையிரதங்களில் வசதிகளை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) அதற்காகச் செலவாகும் பணத்தொகை மதிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1386/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவு இலக்கம் 144 இன் கீழ், இலங்கையின் வருடாந்த மீன் ஏற்றுமதியின் பெறுமதி சுமார் டொலர் 150 மில்லியன் என குறிப்பிடப்பட்டுள்ளதால், 1977 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை இலங்கையின் வருடாந்த மீன் ஏற்றுமதியின் அளவு மற்றும் ஏற்றுமதிப் பெறுமதியை காட்டும் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) ஐரோப்பிய சந்தைக்கான மீன் ஏற்றுமதி தடை செய்யப்படுவதற்கு ஏதுவான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) தடையை நீக்குவதற்கு அப்போதைய மீன்பிடி அமைச்சர் கௌரவ ராஜித சேனாரத்னவினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) ஐரோப்பிய சந்தைக்கான மீன் ஏற்றுமதித் தடையை நீக்குவதற்கு இலங்கை கடைப்பிடித்த நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) அதன் பிரகாரம் மீன் ஏற்றுமதித் துறையில் ஏற்பட்ட பிரதான மாற்றங்கள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1469/ '16

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பதுளை மாவட்டத்தில் உள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் பெயர்கள் யாவை;

(iii) தற்போது நிரந்தர கிராம உத்தியோகத்தரொருவர் காணப்படும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மற்றும் அங்கு சேவையில ஈடுபட்டுள்ள கிராம உத்தியோகத்தர்களின் பெயர்கள் யாவை;

(iv) பதுளை மாவட்டத்தில் காணப்படும் கிராம உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக அமைச்சு எடுக்கும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1743/ '17

கௌரவ ரீ. ரஞ்ஜித் த சொய்சா,— சிறைச்சாலை மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள் குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிறைச்சாலை காவலாளி பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக சிறைச்சாலைகள் திணைக்களத்தினால் 2016 ஆம் ஆண்டு நேர்முகப் பரீட்சையொன்று நடாத்தப்பட்டதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், 2016.10.19 ஆம் திகதி முதல் 2016.10.27 ஆம் திகதி வரை நடைபெற்ற நேர்முகப் பரீட்சை மற்றும் 2016.11.03 ஆம் திகதி முதல் 2016.11.12 ஆம் திகதி வரை நடாத்தப்பட்ட கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட பதவிகளுக்கு தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதென்பதையும் சம்பந்தப்பட்ட உடன்படிக்கையில் 2016.11.24 ஆம் திகதி கையொப்பமிடுமாறு தகைமை பெற்றவர்களுக்கு சிறைச்சாலைகள் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டு மீண்டும் அது ஒத்திவைக்கப்பட்டமைக்கான காரணம் யாதென்பதையும்;

(iv) அவ்வாறு ஒத்திவைக்கப்பட்ட நியமனங்கள் இற்றைவரை வழங்கப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நியமனம் வழங்குவதில் சிக்கல்மிகு நிலை உள்ளபோது நியமனம் பெறுபவர் களை அசௌகரியப்படுத்தும் வகையில் இவர்களுக்கு உடன்படிக்கைக் கடிதம் வழங்கப்பட்டமைக்கான காரணம் யாதென்பதையும்;

(ii) தகைமைகளை பூர்த்திசெய்துள்ள நியமனப்பெறுனர்களுக்கு நியமனங்களை வழங்காததன் மூலம் இவர்கள் பெரும் அசௌகரியத்திற்கு உள்ளாகியுள்ளார்கள் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனில், நியமனங்களை மீள வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அத்தேதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1872/ '17

கௌரவ பிமல் ரத்நாயக்க,— மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கட்டுபெத்த, பண்டாரநாயக்க மாவத்தையில் வலது புறமாகவுள்ள நீர்த்தேக்கத்தைச் சுற்றிலும் நடைபாதையொன்று நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கையில் அப்பணிகள் இடையில் நிறுத்தப்பட்டதென்பதையும்;

(ii) நடைபாதையின் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு பெருமளவு வேலைகள் பூர்த்தியடைந்திருக்கும் போது அதன் ஒப்பந்தக்காரர் வேலைகளை நிறுத்திவிட்டு 2016.09.12 ஆம் திகதி இயந்திர உபகரணங்களை எடுத்துச் சென்றுள்ளதனால் அதன் பணிகள் மீண்டும் ஸ்தம்பிதமடைந்துள்ளது என்பதையும்;

(iii) தற்போது அந்த நீர்த்தேக்கமும் அதனைச் சுற்றியுள்ள பிரதேசமும் குப்பைகள் அகற்றுவதற்காகப் பயன்படுத்தப்படுவதனால் சுற்றாடல் மாசடைந்து நுளம்புகளின் எண்ணிக்கையும் பெரிதும் அதிகரித்துள்ளதென்பதையும்;

(iv) நடைபாதையின் நிர்மாணப் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளதனால், துப்பரவு செய்யப்பட்ட நீர்த்தேக்கமும் கால்வாயும் முழுமையாக காடடர்ந்துள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்த நடைபாதையை நிர்மாணிப்பதற்கும் மற்றும் மிகவும் மாசடைந்துள்ள நீர்த்தேக்கத்தைத் துப்பரவு செய்யவும் நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், இதன் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

(iii) இதுவரை மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்காக ஏற்பட்ட செலவினை பொறுப்புக் கூறவேண்டியவர்களிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2109/ '17

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களுத்துறை மாவட்டத்தில், மத்துகம கல்வி வலயத்தில் அமைந்துள்ள கலைமகள் தமிழ் வித்தியாலயத்தில் நானூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்விப் பொதுத் தராதரம் (சாதாரண தரம்) வரை கல்வி பயில்கின்றனர் என்பதையும்;

(ii) மேற்படி பாடசாலையை "அண்மித்த பாடசாலை சிறந்த பாடசாலை" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்ய இரண்டு மாதங்களுக்கு முன்னர் அடிக்கல் நாட்டப்பட்டது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி அ (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாது என்பதையும்;

(ii) மேற்படி பாடசாலையில் கல்விப் பொதுத் தராதர (உயர் தர) வகுப்புகளை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனின், குறித்த வகுப்புகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2148/ '17

கௌரவ அசோக பிரியந்த,— நீர்ப்பாசன மற்றும் நீர் வளமூல முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போதைய நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் வடமேல் மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட நீர்ப்பாசன கருத்திட்டங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அந்த நீர்ப்பாசன கருத்திட்டங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்தினதும் கீழ் அனுகூலங்களைப் பெறுகின்ற கிராம அலுவலர் பிரிவுகள் மற்றும் குடும்பங்களின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(iv) குறிப்பிட்ட கருத்திட்டங்களின் நோக்கங்கள் யாவையென்பதையும்;

(v) நீர் பற்றாக்குறையினால் பாதிக்கப்பட்டுள்ள வடமேல் மாகாண மக்கள் சார்பாக அமைச்சானது எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்ற கருத்திட்டங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2284/ '17

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2017 ஆம் ஆண்டில், இலங்கை ஆசிரியர் சேவையின் 3(1)அ தரத்திற்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்காக பரீட்சை நடாத்தப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) தேசிய பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிரப்புவதற்காக மாவட்ட மட்டத்தில் நடாத்தப்பட்ட இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடைபெற்றது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) எனவே, பரீட்சார்த்திகளுக்கு மேற்படி எந்த மொழியிலும் விடையளிக்கக் கூடியதாக இருந்தது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) ஆங்கில மொழி ஆசிரியர் வெற்றிடங்களுக்காக சிங்கள மொழியில் விடையளித்த விண்ணப்பதாரிகளுக்கு தெரிவுசெய்யப்படுவதற்கான வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், சிங்கள மொழிமூல வினாத்தாளுக்கும் ஆங்கில மொழியில் விடையளிக்க வேண்டுமென குறித்த பரீட்சைக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்ட வர்த்தமானப் பத்திரிகையில் அல்லது வேறு வகையில் முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டிருந்ததா என்பதையும்;

(vi) ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறைக்காக சிங்கள மொழிமூலம் விடையளித்தல் தகைமையீனமாகுமென முன்னறிவித்தல் கொடுக்கப்படாத நிலையில், சிங்கள மொழிமூலம் விடையளித்த பரீட்சார்த்திகள் தெரிவு செய்யப்படாததன் மூலம் அநீதி நேர்ந்துள்ளது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(vii) ஆமெனில், அதற்காக எடுக்கும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# 2018 சனவரி 12, வெள்ளிக்கிழமை

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா.199/ '17

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— பால் உற்பத்திக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள உள்நாட்டுப் பாற் பண்ணையாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு துரித நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல்,— வருடாந்தம் எமது நாட்டிற்கான பால் மா இறக்குமதிக்காக பெருந்தொகைப் பணம் செலவிடப்படுவதுடன், இப்பணத்தை எமது நாட்டிற்குள்ளேயே சேமித்துக்கொள்ள முடியுமெனில் அது நாட்டின் பொருளாதாரத்திற்கு பெரும் உந்துசக்தியாக அமையுமென்பதால் பால் உற்பத்திக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள உள்நாட்டு பாற் பண்ணையாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு துரிதமான நிகழ்ச்சித் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுகிறது.

பா. 200/ '17

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வடமேல் மாகாணத்தினுள் அமைந்துள்ள தொல்பொருளியல் ரீதியில் பெறுமதிவாய்ந்த இடங்களை பேணுவதற்காக துரிதமான நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல்,— வடமேல் மாகாணத்திலுள்ள குருணாகல் மாவட்டம் மிகவும் பெருமைவாய்ந்த வரலாற்றிக்கு உரிமை கோரும் தொல்பொருளியல் ரீதியில் பெறுமதிவாய்ந்த பல இடங்களைக் கொண்டதொரு மாவட்டமாக இருப்பதுடன், பண்டைய காலத்தில் குருணாகல், தம்பதெனிய மற்றும் யாப்பகுவ போன்ற இராச்சியங்களும் இம்மாவட்டத்திலேயே அமைந்திருந்ததெனினும் தற்போது இந்த புராதன இடங்களின் பாதுகாப்பு சம்பந்தமாக பாரிய பிரச்சினைகள் தோன்றியுள்ளதால் மேற்படி தொல்பொருளியல் இடங்களை பேணுவதற்காக துரிதமான நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுகிறது.

பா. 201/ '17

கௌரவ துசார இந்துனில் அமரசேன,— சகல துறைகளையும் உள்ளடக்கும் வகையில் விரிவான சமூக பாதுகாப்பு வலையமைப்பொன்றை நடைமுறைப்படுத்தல்,— எந்தவொரு நாட்டிலும் வெற்றிகரமான சமூக பாதுகாப்பு வலையமைப்பொன்று காணப்படுவது அந்த நாட்டில் வாழும் பிரசைகளுக்கு முக்கியமாகும் என்பதுடன், இலங்கையில் அரசதுறை மற்றும் தனியார்துறை ஊழியர்களுக்காக ஓய்வூதிய முறையொன்று அல்லது சேமலாப நிதிய முறையொன்று நடைமுறையில் இருந்த போதிலும், நாட்டில் முறைசாரா துறையிலுள்ள ஊழியர்களுக்காக அத்தகைய சமூக பாதுகாப்பு முறையொன்று நடைமுறையில் இல்லாமையால், அனைத்து துறைகளையும் உள்ளடக்கும் வகையில் விரிவான சமூக பாதுகாப்பு வலையமைப்பொன்று நடைமுறைப்படுத்தப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுகிறது.

பா. 202/ '17

கௌரவ அசோக்க பிரியந்த,— புத்தளம் மாவட்டத்தின் கரையோரப் பகுதியைப் பாதுகாப்பதற்கான துரித நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல்,— புத்தளம் மாவட்டம் அதிரம்யமான கரையோரப் பகுதிக்கு உரிமைகோரிய போதிலும், கடலரிப்பு, கண்டல் தாவரங்கள் அழிவடைதல், அத்துமீறிய நிர்மாணிப்புகள் போன்ற காரணங்களினால் கரையோரப்பகுதி மாசடைந்துள்ளதால், புத்தளம் மாவட்டத்தின் கரையோரப் பகுதியை பாதுகாப்பதற்காக துரித நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுகிறது.

பா. 203/ '17

கௌரவ அசோக்க பிரியந்த,— புத்தளம் மாவட்டத்துக்குரித்தாக இருந்த கரப்பந்தாட்ட விளையாட்டின் பெருமையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல்,— இற்றைக்கு ஏறத்தாழ ஒரு தசாப்தத்துக்கு முன்னர் புத்தளம் மாவட்டத்தின் பாடசாலைகளிலிருந்து உருவாகிய திறமைவாய்ந்த கரப்பந்தாட்ட விளையாட்டு வீரர்களும் வீராங்கனைகளும் தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் வெளிப்படுத்திய திறைமைகளின் காரணமாக புத்தளம் மாவட்டத்துக்கு கரப்பந்தாட்ட விளையாட்டு மூலம் பெருமையானதோர் இடம் கிடைத்திருந்த போதிலும், இன்றளவில் அந்த நிலைமையில் ஓரளவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதனால், மீண்டும் அந்தப் பெருமையை புத்தளம் மாவட்டத்துக்கு கொண்டு வருவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப் படுத்தப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுகிறது.

பா. 204/ '17

கௌரவ சமிந்த விஜேசிறி,— பாடசாலை மற்றும் விளையாட்டுக் கழக கிரிக்கெட் போட்டித் தொடர்களின் தரத்தை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை அமைத்தல்,— கடந்த பல வருடங்களாக இலங்கையின் கிரிக்கெட் விளையாட்டு பெரும் வீழ்ச்சிக்குள்ளாகி இருப்பதனால் தேசிய அணிக்கு திறமைவாய்ந்த வீரர்களைத் தேடிக்கொள்வதற்காக பாடசாலை மற்றும் விளையாட்டுக் கழக மட்டத்தில் கிரிக்கெட் போட்டித் தொடர்களின் தரத்தை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுகிறது.

பா. 205/ '17

கௌரவ சமிந்த விஜேசிறி,— கிராமியப் பிரதேசங்களில் பௌத்த விஹாரைகளில் தங்கியிருக்கும் வயோதிப பிக்குமார்களைப் பாதுகாப்பதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை அமைத்தல்,— இலங்கையின் அநேகமான கிராமியப் பிரதேசங்களில் பௌத்த விஹாரைகள் மிகக் குறைந்த பொருளாதார நிலையிலுள்ளதால், அத்தகைய விஹாரைகளில் தங்கியிருக்கும் வயோதிப பிக்குமார்களைப் பாதுகாப்பதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுகிறது.

பா. 206/ '17

கௌரவ அசோக்க பிரியந்த,— புத்தளம் மாவட்டத்தில் ரின் மீன் தொழிற்சாலை ஒன்றைத் தாபித்தல்,— மக்களின் போஷாக்குத் தேவைகளை பூர்த்தி செய்வதற்குத் தேவையான புரதச்சத்தை பெற்றுக் கொடுக்கவும், வருடாந்தம் ரின் மீன் இறக்குமதிக்காக வெளிநாட்டுக்கு பாய்ச்சப்படுகின்ற வெளிநாட்டுச் செலாவணியை பாதுகாத்துக் கொள்வதற்காகவும், மேலும் ரின் மீன் தொழிற்சாலையொன்றை ஆரம்பிக்கத் தேவையான அனைத்து வளங்களும் புத்தளம் மாவட்டத்தில் இருப்பதாலும், அம்மாவட்டத்தில் ரின் மீன் தொழிற்சாலையொன்றை ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுகிறது.

பா. 207/ '17

கௌரவ அசோக்க பிரியந்த,— கொழும்பு – கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையை சிலாபம் வரை நீடித்தல்,— ஒரு நாட்டின் அபிவிருத்தியில் அதிவேக நெடுஞ்சாலைகள் மிக முக்கியமானவையாக உள்ளதாலும், தற்போதைய நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் புத்தளம் மாவட்டம் மிக துரிதமாக அபிவிருத்தியடைந்து வருவதாலும், அந்த அபிவிருத்தி வேகத்தை மேலும் அதிகரிக்கச் செய்யும் பொருட்டு தற்போது கொழும்பிலிருந்து கட்டுநாயக்க வரையுள்ள அதிவேக நெடுஞ்சாலை சிலாபம் வரை நீடிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுகிறது.